சில வீடுகள் மட்டும் அந்த இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே வருவதால் புதிய கடைகள் திறக்கமுடியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் புதிய கடை திறப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளியவர்களுக்குப் பயன்படுகின்ற பணிகள் நடைபெறவேண்டும், சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று பணித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 228, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

228—

குடிநீர் விநியோகம்

***8397—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியிலுள்ள அனந்தபுரம்-செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட பி.வி.சி. பைப்புகள் அடிக்கடி வெடிப்பதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதைத் தடுக்க அவற்றினை மாற்றி சீரான குடிநீர் கிடைக்க அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியிலுள்ள பொது மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்வதில் அனந்தபுரம்-செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மெயின் பைப்புகள் அனைத்துக்கும் கல்நார் பைப்புகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 10]

பொருத்தப்பட்டு குடிநீர் ஏற்றப்படுகிறது. மெயின் பைப் லைனில் பிளாஸ்டிக் குழாய் பயன்படுத்தப்படவில்லை. எனினும், தற்போது நீர் கொண்டு வரும் மெயின் பைப்புகள் வெடிப்பு ஏதும் இல்லாமல் குடிநீர் விநியோகம் செய்ய நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. ஏழுமலை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அனந்தபுரம்-செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குப் பயன்படுத்துகின்ற கல்நார் பைப்புகள், இந்தத் திட்டத்திற்காக வாங்கப்பட்ட பைப்புகள் அல்ல. இதில் பயன்படுத்தியிருக்கின்ற பைப்புகள் வேதாரண்யம் பகுதியில் ஒரு குடிநீர்த் திட்டத்திற்கு வாங்கப்பட்ட பைப்புகள். அங்கு பயன்படுத்த முடியாது என்று நிராகரிக்கப்பட்ட காரணத்தால் 1989-90 ஆம் ஆண்டில் அவசரம் அவசரமாக அந்த பைப்புகளை இங்கு பயன்படுத்தி குடிநீர் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த பைப்புகளின் தரம், கிளாஸ் 10 வகையைச் சார்ந்தது. அந்தத் திட்டத்தின் ஆரம்பப் பகுதியில் நீர் அழுத்தம் அதிகமாக உள்ள காரணத்தால் அந்த பைப்புகளில் அடிக்கடி வெடிப்பு ஏற்படுகின்றது. அதனால் கடைக்கோடியில் இருக்கின்ற செஞ்சி பகுதிக்குத் தண்ணீர் வரவில்லை. நான் இதை அங்கு நேரடியாகச் சென்று பார்த்து இருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதில் அதிகாரிகளால் எப்போது வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை. கடந்த இரண்டு மாத காலமாக பைப்பு வெடிப்பால் செஞ்சி பகுதியில் தண்ணீர் வரவில்லை. எனவே, மேற்குன்றத்திற்கும், இருதயபுரத்திற்கும் இடையில் சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரத்திற்கு கிளாஸ் 15 வகை பைப்புகளைப் பயன்படுத்தித் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு செஞ்சி பேரூராட்சி, மிகப் பெரிய பேரூராட்சி. மக்கள் தொகை சுமார் 28,000 பேர் உள்ளார்கள். 160 தெருக்கள் உள்ளன. 18 வார்டுகள் உள்ளன. இந்தத் திட்டத்தின் கடைக்கோடி பகுதியாக செஞ்சி இருக்கிற காரணத்தால், குடிக்கத் தண்ணீர் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடந்த இரண்டு, மூன்று மாதங்களாகக் கடும் வறட்சியின் காரணமாக வாரத்திற்கு ஒரு நாள்கூட அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வருவதில்லை. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள், மாநகரப் பகுதிகளுக்கு லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குவதைப் போல, செஞ்சி பேரூராட்சிப் பகுதிக்கு லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்க நிதி ஒதுக்கி ஆவன செய்யப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 10

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தென்பெண்ணையாற்றில் நெற்குளம் என்ற பகுதியில் தலைமையிடம் அமைக்கப்பட்டுள்ளது. தலைமையிடத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருதயபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இந்த இடம் மிகவும் உயர்ந்த இடம், உயர்வான பகுதி சேர்ந்த இடம். நீர் அந்தப் பகுதியில் வரும்போது தற்போது 350 எம்.எம். கல்நார் குழாய்கள் மூலமாக நீர் உந்தப்படுகிறது. அந்த நேரத்தில் உயரமான பகுதி என்ற காரணத்தால், நீர் அழுத்தம் அதிகம் உள்ளதால், அந்த கல்நார் குழாய் பைப்புகளில் உடைப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு இருதயபுரத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைத்து, அதில் 40 குதிரை சக்தி திறன் கொண்ட நீர் உந்து நிலையம் அமைக்க 20 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு வறட்சி நிவாரணப் பணியின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் உடனடியாக அந்தத் திட்டப் பணிகள் வெகு விரைவாக முடிக்கப்பட்டு, செஞ்சி பேரூராட்சி பகுதிவாழ் மக்களுக்கு நிறைவாக குடிநீர் வழங்கப்படும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1990-91 ஆம் ஆண்டு கல்நார் பைப்புகளை மாற்றி அமைத்ததாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை தரம் வாய்ந்த கல்நார் பைப்புகளா இல்லையா என்பதுபற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வறட்சி நிவாரணப் பணிக்காக பேரூராட்சிப் பகுதிகளுக்கு 21 கோடியே 76 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து வறட்சியில் முழுமையாக அந்தப் பகுதிவாழ் பொதுமக்களுக்கு நிறைவாக நிரந்தரமாக குடிநீர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே செஞ்சி பேரூராட்சி பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் தேவைக்கு ஏற்ப வழங்கப்படும் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 229, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 230, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.